# இலங்கை வங்கி

உலகளாவிய அதிசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாகவும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் 500 மிகப்பெரிய வங்கிகளுக்குள் ஒன்றாகவும் தரப்படுத்தப்பட்டுள்ள அரச வர்த்தக வங்கியும் இலங்கையின் 1ம் தர வங்கியுமாகிய இலங்கை வங்கியின் தொழில்நுட்பப் பிரிவில் நிலவும் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதியும் அனுபவமும் ஆற்றலும் ஊக்கமும் கொண்ட இளம் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## கணினி அமைப்புப் பகுப்பாய்வாளர் / நிரலர் (System Analyst / Programmer)

**தேவைப்படும் தகைமைகள்**

**1. கல்வித் தகைமைகளும் அனுபவமும்**

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் கணினி விஞ்ஞானம் அல்லது தகவற் தொழில்நுட்பம் அல்லது தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில்நுட்பம் அல்லது மென்பொருட் பொறியியலில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பில் (உயர் பிரிவு) பெற்றுக்கொண்ட இளமாணிப் பட்டம்.

**அல்லது**

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் கணினி விஞ்ஞானம் அல்லது தகவற் தொழில்நுட்பம் அல்லது தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில்நுட்பம் அல்லது மென்பொருட் பொறியியல் இளமாணிப் பட்டத்துடன் மென்பொருள் வடிவமைப்பு / தர உத்தரவாதம் / தரவுத்தள முகாமைத்துவம் / தகவற் பாதுகாப்பு துறையில் குறைந்தது ஓராண்டு அனுபவம் பெற்றிருத்தல்.

**2. ஏனைய தகைமைகள்**

- தகவல் அமைப்புப் பாதுகாப்பு / தரவுத்தள முகாமைத்துவம்/ தர உத்தரவாதம் தொடர்பான தொழில்முறைத் தகைமைகள் மேலதிகத் தகுதிகளாகக் கொள்ளப்படும்.
- தர உத்தரவாதம் / தரவுத்தள முகாமைத்துவம் / தகவற் பாதுகாப்பு அல்லது Enterprise / Advanced JAVA, J2EE, XML, RPG, ILE, CLLE, Dojo, Spring MVC, Web Sphere, C#, .Net, HTML முதலானவற்றைப் பயன்படுத்தி மென்பொருள் வடிவமைத்தல் என்பவற்றில் அனுபவத்தைக் கொண்டிருத்தல் கூடுதல் நன்மையாகும்.
- ஊக்கமும் பெறுபேறுகளை மையமாகக்கொண்டு செயற்படுமாற்றலும் கொண்டிருத்தல்
- புத்தாக்கச் சிந்தனையும் சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் திறன்களும் வாய்க்கப்பெற்றிருத்தல்

**3. வயது**

விண்ணப்ப முடிவுத் திகதியில் 30 வயது அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

**4. விதிகளும் நிபந்தனைகளும்**

- இப்பதவி வழமையான வங்கிச் சேவைக்கு புறம்பானதெனினும் (மூடிய சேவை) வங்கியின் பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.
- விண்ணப்பதாரர் 02 வருட தகுதிகாண் காலத்தின் பின்னர் தகுதியானவர் எனக் கருதப்பட்டால் வங்கியின் நிரந்தர ஆளணிக்குள் கணினிப் பகுப்பாய்வாளர் / நிரலர் – I என்ற பதவியில் அமர்த்தப்படுவார்.
- அடிப்படைச் சம்பள அளவுத்திட்டம்

  ரூ. 62,060/- - ரூ. 81,660/-

  ரூ. 980/- x 20

  (அனைத்தும் உள்ளடங்கலாக மாறும் வாழ்க்கைச் செலவுப்படியுடன் மாதாந்த மொத்தச் சம்பளம் ஏறத்தாழ ரூ. 143,000/- ஆகும்)
- வார இறுதியில்/ விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

## வலையமைப்பு / தொடர்பாடல் பொறியியலாளர் (Network/ Communication Engineer)

**தேவைப்படும் தகைமைகள்**

**1. கல்வித் தகைமைகளும் அனுபவமும்**

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் கணினி விஞ்ஞானம் அல்லது தகவற் தொழில்நுட்பம் அல்லது தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில்நுட்பம் அல்லது பொறியியலில் இளமாணிப் பட்டம் பெற்றிருப்பதோடு வலையமைப்பு மற்றும் தொலைத்தொடர்புத் துறையில் ஓராண்டு அனுபவமும் கொண்டிருத்தல் வேண்டும்.

**அல்லது**

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் கணினி விஞ்ஞானம் அல்லது தகவற் தொழில்நுட்பம் அல்லது தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில்நுட்பம் அல்லது பொறியியலில் இளமாணிப் பட்டம் பெற்றிருப்பதோடு CCNA சான்றும் கொண்டிருத்தல் வேண்டும்.

**அல்லது**

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் விஞ்ஞான இளமாணிப் பட்டம் பெற்றிருப்பதோடு CCNA சான்றும் வலையமைப்பு மற்றும் தொலைத்தொடர்புத் துறையில் ஓராண்டு அனுபவமும் கொண்டிருத்தல் வேண்டும்.

**2. ஏனைய தகைமைகள்**

- ஊக்கமும் பெறுபேறுகளை மையமாகக்கொண்டு செயற்படுமாற்றலும்
- தேவைப்படும்போது வெளி மாவட்ட கிளைகளுக்குச் செல்லும் இயலுமை

**3. வயது**

விண்ணப்ப முடிவுத் திகதியில் 30 வயது அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

**4. விதிகளும் நிபந்தனைகளும்**

- இப்பதவி வழமையான வங்கிச் சேவைக்கு புறம்பானதெனினும் (மூடிய சேவை) வங்கியின் பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.
- விண்ணப்பதாரர் 02 வருட தகுதிகாண் காலத்தின் பின்னர் தகுதியானவர் எனக் கருதப்பட்டால் வங்கியின் நிரந்தர ஆளணிக்குள் வலையமைப்பு / தொடர்பாடல் பொறியியலாளர் – I என்ற பதவியில் அமர்த்தப்படுவார்.
- அடிப்படைச் சம்பள அளவுத்திட்டம்

  ரூ. 62,060/- - ரூ. 81,660/-

  ரூ. 980/- x 20

  (அனைத்தும் உள்ளடங்கலாக மாறும் வாழ்க்கைச்செலவுப் படியுடன் மாதாந்த மொத்தச் சம்பளம் ஏறத்தாழ ரூ. 143,000/- ஆகும்.
- வார இறுதி / விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

## தெரிவு முறை

- போட்டிப் பரீட்சையினைத் தொடர்ந்து பட்டியற்படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.
- போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் நேர்முகத் தேர்வுக்குத் தகுதிபெறும் விண்ணப்பதாரிகளைப் பட்டியற்படுத்த மட்டுமே பயன்படுத்தப்படும்.

## விண்ணப்பிக்கும் முறை

உங்களது சுயவிபரக் கோவையினை **www.boc.lk** என்ற எங்களது இணையத்தள முகவரியூடாக (**Careers** என்ற பகுதியின் கீழ்) தரவிறக்கம் செய்யக் கூடிய மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக பூர்த்தி செய்து உறவுமுறைசாராத இரண்டு நபர்களின் தொடர்பு விபரங்களுடனும் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள், அனுபவத்தை நிரூபிக்கும் ஆவணங்கள் என்பவற்றின் பிரதிகளுடனும் **13.08.2022 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கும் வகையில் கீழ்க்காணும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

விண்ணப்பத்தின் முடிவுத் திகதியில் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தொடர்புடைய சான்றிதழ்களின் நிழற்பிரதிகளைக் கொண்டிராத அல்லது விண்ணப்ப முடிவுத் திகதியிற்குப் பின்பு கிடைக்கப் பெறும் அல்லது உண்மைக்குப்புறம்பான தகவல்களைக் கொண்ட எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்பின் எந்தக் கட்டத்திலும் நிராகரிக்கப்படும்.

**பிரதான முகாமையாளர் (ஆட்சேர்ப்பும் தொழில் அபிவிருத்தியும்)**
**இலங்கை வங்கி**
**26ஆவது மாடி, தலைமை அலுவலகம்,**
**இலங்கை வங்கிச் சதுக்கம்**
**இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு -01**

தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.
தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.
நிரப்பப்படவுள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பை பிற்போடும்/இரத்துச்செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்